**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 212 of 2024

DATE : 08.07.2025

Depositions of witness for Prosecution

PW : 1

| Name | அய்யனார் | Caste | |
|---|---|---|---|
| Father/Husband's Name | முனியாண்டி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 8th day of July 2025

**(2 முதல் 4 எதிரிகள் ஆஜர். 5 மற்றும் 6 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317ன் படி மனு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை : -**

1) நான் லட்சுமியாபுரத்தில் வசித்து வருகிறேன் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 10 .12. 2012 அன்று எனது வீட்டிற்கு பக்கத்தில் உள்ள ஆட்டுத்தொழுவத்தில் 8 ஆடுகளை அடைத்து வைத்திருந்தேன் மறுநாள் ஆட்டுதொழுவத்தை திறந்து பார்த்தபோது என்னுடைய ஆடுகள் ஐந்து ஆடுகளும் மாரிமுத்து என்பவருக்கு சொந்தமான ஒரு ஆடு வெள்ளைச்சாமிசொந்தமான இரண்டு ஆடுகளும் ஆக மொத்தம் 8 ஆடுகளை காணவில்லை. காணாமல் போன ஆடுகளின் மொத்த மதிப்பு சுமார் 60,000 இருக்கும். இது சம்பந்தமாக நத்தம் பட்டி காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். புகாரியில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 14 12 2012ஆம் தேதி நத்தம்பட்டி காவல் நிலையத்திலிருந்து காணாமல் போன ஆடுகள் கிடைத்து விட்டதாக போன் மூலம் எனக்கு தகவல் சொன்னார்கள். ஆடுகளை நீதிமன்றம் மூலம் மனு செய்து பெற்றுக் கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள ஆடுகளை தான் நீதிமன்றத்தில்

மனுசெய்து பெற்றுக் கொண்டேன். ஆடுகள் உள்ள புகைப்படம் சா.பொ.1 (4 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகளை காவல் நிலையத்தில் வைத்து அடையாளம் காட்டினார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**3ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை : -**

1) எனக்கு எழுதப் படிக்கத் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் எப்போது நடைபெற்றது என்றால் 10 .12 .2012. காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்கும் போது என்னுடன் யாரெல்லாம் வந்தார்கள் என்றால் வெள்ளைச்சாமி, அய்யனார் மற்றும் மாரிமுத்து ஆகியோர்கள் உடன் வந்திருந்தார்கள். புகாரை நான் தான் எழுதினேனா என்றால் இல்லை எனது சித்தப்பா எழுதினார். புகாரில் என்ன எழுதி உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புகாரில் நான் கையெழுத்து செய்யவில்லை. திருட்டுச் சம்பவம் எப்போது நடைபெற்றது என்றால் இரவு ஒரு மணி இருக்கும். நான் எத்தனை ஆடுகளை வளர்த்து வந்தேன் என்றால் 20 ஆடுகள் இருக்கும். எனக்கு சொந்தமான 20 ஆடுகளில் 5 ஆடுகளை மட்டும் தான் காணாமல் போனது. எனது வீட்டிற்கும் ஆட்டுத் தொழுவத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 10 அடி இருக்கும். ஆட்டுத் தொழுவம் யாருக்கு சொந்தமானது என்றால் எனக்கு சொந்தமானது. ஆட்டுத் தொழுவத்தின் நீளம் மற்றும் அகலம் எவ்வளவு இருக்கும் என்றால் 21 x 19 ஆகும். மேற்படி அளவுள்ள ஆட்டுத் தொழுவத்தில் எத்தனை ஆடுகள் வளர்க்கலாம் என்றால் சுமார் 50 ஆடுகளை வளர்க்கலாம். சம்பவம் நடைபெற்ற சமயத்தில் எத்தனை ஆடுகளை அடைத்து வைத்திருந்தோம் என்றால் 50 ஆடுகள் இருக்கும். எத்தனை மணிக்கு நான் சென்று பார்த்தேன் என்றால் இரவு ஒரு மணி இருக்கும். ஒரு மணிக்கு நான் எதை பார்த்தேன் என்றால் ஆடுகளை பார்த்தேன் காணாமல் போனது. நான் ஆட்டு தொழுவத்தை வழக்கமாக எப்போதெல்லாம் பார்வையிடுவேன் என்றால் எழுந்திருக்கும் பொழுதெல்லாம் பார்வையிடுவேன். ஆட்டு தொழுவத்தில் தங்கும் பழக்கம் உண்டு என்றால் கிடையாது. 50 ஆடுகளில் 8 ஆடுகள் மட்டும் காணாமல் போன விபரம் எனக்கு இரவிலேயே தெரியுமா என்றால் தெரியும். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் காவல் நிலையத்தில் வைத்து தான் பார்த்தேன் அதற்கு முன்பு எனக்கு தெரியாது. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னாலும் பொய்யாக புகார் கொடுத்து அந்த பொய் புகார் மீது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரி அல்ல. போலீசார்கள் காணாமல் போன ஆடுகளை எங்கே வைத்து கைப்பற்றினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் பூவந்தி காவலர்கள் கைப்பற்றி நத்தம்பட்டி காவல் நிலையத்திற்கு ஒப்படைத்தார்கள்.

**2, 4 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : -**

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் கூலி வேலை செய்து வருகிறேன். சம்பவம் எங்கே நடந்தது என்றால் எம்.புதுப்பட்டி மெயின் ரோடு. ஆட்டு தொழுவத்தை சுற்றி

சுமார் பத்து வீடுகள் இருக்குமா என்றால் இருக்கும் . மேற்படி தெருவுக்குள் வருவதற்கு வடக்கிலிருந்து தெற்காக தான் வரவேண்டும் என்றால் சரிதான். தெற்கிலிருந்து வடக்காக வர இயலாது என்றால் சரிதான் கண்மாய்க் கரை உள்ளது. ஆட்டினை திருடுவதற்காக பயன்படுத்திய வாகனம் நான்கு சக்கர வாகனம் என்றால் சரிதான். மேற்படி நான்கு சக்கர வாகனம் எங்கள் தெருவுக்கு வந்ததை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஆட்டு தொழுவத்திற்குள் உரிமையாளரை தவிர வேறு நபர்கள் சென்றால் ஆடுகள் சத்தம் போடும் என்றால் சரிதான். ஒரு ஆட்டினை திருட சென்றாலே மற்ற ஆடுகள் சத்தம் போட்டு கலையும் என்றால் சரிதான். நான் சொல்வது போல திருட்டு சம்பவம் நடைபெற்றிருந்தால் ஆடுகள் சத்தம் கேட்டு நான் வந்திருப்பேன் என்றும் நான் சொல்வது போல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்பதால் தான் நான் சென்று ஆட்டு தொழுவத்தை பார்க்கவில்லை என்றும் சொன்னார் சரியல்ல. மாரிமுத்து வெள்ளைச்சாமி ஆடுகள் காணாமல் போனது சம்பந்தமாக தனியாக புகார் மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல 50 ஆடுகள் தொழுவத்தில் இருந்தால் இரவு நேரத்தில் 8 ஆடுகள் மட்டும் காணாமல் போனதை உடனடியாக கண்டுபிடிக்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளை கைது செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிரிகள் கிருஷ்ணன் மற்றும் பாண்டித்துரை ஆகியவர்களை கைது செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் நேரில் சென்று பார்க்கவில்லை. நான் நேரடியாக பூவந்தி காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் சென்றேன். நான் சொல்வது போல ஆடுகள் எதுவும் காணாமல் போகவில்லை என்று சொன்னால் சரியல்ல. பூவந்தி காவல் நிலையத்திற்கு நான் எப்போது சென்றேன் என்றால் பத்தாம் தேதி இருக்கும். எதிரிகள் எந்த திருட்டு சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்று சொன்னாலும் நான் பொய்யாக புகார் மனு கொடுத்திருக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

**மறு விசாரணை : - இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு